

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேலக்கோட்டையில் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் வக்கீல் பாலாஜி, லதா அதியமான், டிஸ்கோ அலாவுதீன், இளமகிழன், செல்லம்பட்டி முத்துராமன், முத்துராமலிங்கம், ஞானசேகரன், சிவனாண்டி, கொ.தனபாண்டி, தங்கப்பாண்டியன், ஆதிமூலம், ஸ்ரீதர், மதன்குமார், சுதாகரன், அஜித்பாண்டி, எஸ்.ஓ.ஆர். தங்கப்பாண்டியன், ரம்யா முத்துக்குமார், கீர்த்திகா தங்கபாண்டியன், ராமமூர்த்தி, கிருஷ்ணபாண்டியன், உசிலை சிவா, ஆதவன் அதியமான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மதுரை மாநகராட்சி மத்திய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மண்டலம் 3 வார்டு எண்.50 சிம்மக்கல் திருமலைராயர் படித்துறை பகுதியில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியம் சார்பில் வழங்கும் அடையாள அட்டையினை தூய்மைப் பணியாளர்களுக்கு அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் 13.10.2025 அன்று வழங்கினார்கள் அருகில் தலைமை பொறியாளர் சி.வி.பாபு, உதவி ஆணையாளர் பிரபாகரன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

### ரூ.190 கோடியில்

# திண்டிவனம் - தேனியில் மெகா உணவு பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

சென்னை, அக் 15 -

சிப்காட் தொழில் பூங்கா க்களில் 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள், ரூ.120 கோடி செலவில் திண்டிவனம் மெகா உணவு பூங்கா, ரூ.70 கோடி செலவில் தேனி மெகா உணவு பூங்கா ஆகியவற்றை முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தொழில் பூங்காக்களில் அமைத்துள்ள

16 புதிய குழந்தைகள் காப்பகங்கள், 120 கோடி ரூபாய் செலவில் விழுப்பு ரம் மாவட்டத்தில் 157.91 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள திண்டிவனம் மெகா உணவு பூங்கா மற்றும் 70 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் 123.49 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள தேனி மெகா உணவு பூங்கா ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்துவைத்தார்.

**சிப்காட் தொழில் பூங்காக் களில் பணிபுரிவோரின் குழந்தைகள் பராமரிப்புக்காக 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள்**

முதலீடுகளை ஈர்ப்பது, வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி தொழிலாளர் நலன் பேணுவதிலும் தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்திவருகிறது. இந்தியாவிலேயே அதிகமான செயல்பாட்டில் உள்ள தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. நாடு முழுவதிலும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்த பெண்களில் 43 சதவிகித பங்களிப்பை கொண்டிருப்பது தமிழ்நாட்டின் தனிச் சிறப்பும் பெருமையும் ஆகும். எனவே, பெண் தொழிலாளர்களின் நலன் பேணும் விதமாக, மகளிர் தங்கும் விடுதிகள், பொது வசதிகள், திறன் மேம்பாட்டு வசதிகள், தாய்மார்கள் நலன் காக்கும் பொருட்டு அர்பணிப்புடன் கூடிய குழந்தை காப்பக வசதிகளையும் சிப்காட் நிறுவனம் அமைத்து வருகின்றது.

அந்த வகையில், தேர்வாய்கண்டிகை, வல்லம் வடகால், சிறுசேரி, கும்மிடிப்பூண்டி, கடலூர், பர்கூர், பெருந்துறை, தூ த்துக்குடி, நிலக்கோட்டை, இராணிப்பேட்டை, புதுக்கோட்டை, மானாமதுரை, ஒரகடம், பிள்ளை ப்பாக்கம், ஓசூர், கங்கைகொண்டான் ஆகிய 16 தொழில் பூங்காக்களில் நிறுவப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் காணொலி வாயிலாக திறந்து வைக்கப்பட்டன.

இந்த குழந்தைகள் காப்பகங்களை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், இந்திய வர்த்தக சபைகளின் கூட்டமைப்பு மற்றும் தொழில் துறை மகளிர் அமைப்பு (FICCIFLO) ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கி உள்ளது. தொழில் பூங்காக் களில் பணிபுரியும் பெற்றோர்கள், குறிப்பாக தாய்மார்களின் குழந்தை பராமரிப்பு சுமையை குறைக்க ஏதுவாக பணிபுரியும் இடத்திற்கு அருகில், பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலமைப்புடன் இக்காப்பகங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

**மெகா உணவுப் பூங்காக்கள்**

தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனம், மாநிலத்தில் உணவுசார் உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கில் மணப்பாறை, திண்டிவனம் மற்றும் தேனி ஆகிய மூன்று மாபெரும் உணவுப் பூங்காக்களை உருவாக்கியுள்ளது. 138 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்ட மணப்பாறை மெகா உணவுப் பூங்கா 29.12.2022 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**திண்டிவனம் மெகா உணவு பூங்கா**

அதன் தொடர்ச்சியாக, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் கொள்ளார் மற்றும் பெலாகுப்பம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 157.91 ஏக்கர் பரப்பளவில் 120 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள திண்டிவனம் மெகா உணவு பூங்காவினை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இப்பூங்காவில், 3 தொழிற்சாலைகளுக்கு 36.05 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, 123.84 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 350 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட உள்ளது. அத்துடன் தகுதி வாய்ந்த தொழில் நிறுவனங்கள் தொழில் துவங்க 55.59 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்திட தயார் நிலையில் உள்ளது.

**தேனி மெகா உணவு பூங்கா**

தேனி மாவட்டத்தில் உப்பார்பட்டி, தப்புகுண்டு மற்றும் பூமலைகுண்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 123.49 ஏக்கர் பரப்பளவில் 70 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள தேனி மெகா உணவு பூங்காவினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இப்பூங்காவில், 11 தொழிற்சாலைகளுக்கு 45.97 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, 160.53 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 700 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட உள்ளது. அத்துடன் தகுதி வாய்ந்த தொழில் நிறுவனங்கள் தொழில் துவங்க 27.34 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்திட தயார் நிலையில் உள்ளது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.கி. செந்தில்ராஜ், செயல் இயக்குநர் செல்வி அ. கேத்தரின் சரண்யா, FICCIFLO அமைப்பின் தலைவர் திருமதி நியடி மேத்தா, முன்னாள் தலைவர் மரு. சி.ஏ. திவ்யா அபிஷேக், FLO அமைப்பின் முன்னாள் தலைவர்கள் திருமதி சுதா ஷிவ்குமார்,

திருமதி கவிதா தத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி – வாணாபுரம் – தென்பெண்ணை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு

# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.15-

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், தென்பெண்ணை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் நகரத்தைச் சேர்ந்த செந்தில் என்பவரின் மகன் செல்வன்.எத்திராஜ் (வயது 16) என்ற சிறுவன் 11.10.2025 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கூவனூர் கிராமத்திலுள்ள தனது உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு வாணாபுரம் வட்டம், திருவரங்கம் அரங்கநாதர் கோவிலுக்கு அருகிலுள்ள தென்பெண்ணை ஆற்றில் தனது நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் 12.10.2025 அன்று திருக்கோவிலூர் வட்டம், ஆவியூர் கிராமத்தில் மேற்படி சிறுவனின் உடல் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# வருவாய்த் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வழங்கினார்!

*சென்னை, அக்.15-*

*வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன் நேற்று முன்தினம் (13.10.2025) சென்னை-5, சேப்பாக்கம் சர்வே இல்லத்தில் அமைந்துள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தில் பல்வேறு சேவைகளை தொடங்கி வைத்தார். மேலும், உயர் அலுவலர்களுக்கு 10 ஈப்பு மற்றும் இத்துறையில் பணிபுரிந்து காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கியும், இணையவழி பட்டா மாறுதல் சேவையினை கண்காணித்து அதன் தரத்தினை உயர்த்திட தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையத்தினை துவக்கி வைத்தார்.*

*இணையவழி பட்டா மாறுதல் மற்றும் புல எல்லைகளை அளவீடு செய்தல் போன்ற சேவைகளை கண்காணிக்கும் தரக்கட்டுப்பாடு மையம்:*

*நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு, 'தமிழ் நிலம்' எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக, இணையவழி பட்டா மாறுதல், புல எல்லை அளவீடு, வரைபட விற்பனை போன்ற பல சேவைகளை நில அளவை மற்றும் நிலவரித்தி ட்டத் துறை பொதுமக்களுக்கு இணையவழியில் வழங்கி வருகிறது.*

*இச்சேவைகளை கூர்ந்து கண்காணித்து அவற்றின் தரத்தினை பேணும் பொருட்டு, 'தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம் ஒன்று நில அளவை இணை இயக்குநர் (மத்திய நில அளவை அலுவலகம்) தலைமையில் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தில் உருவாக்கப் பட்டுள்ளது. இத்தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம் மூலம் இணையவழிச் சேவைகளின் புள்ளி விவரங்களை கண்காணிக்கும் வகையில், 'Dashboard' உருவாக்கப்பட்டுள்ளது.*

*இதன் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் இணையவழி பட்டா மாறுதல் மற்றும் புல எல்லை மனுக்கள் போன்ற இணையவழிச் சேவைகள் விரைவாக வும், செம்மையாக வும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.*

**கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குதல்:**

*தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் பல்வேறு இனங்களில் பணிபுரிந்து, பணியின்போது காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு சென்னை, கரூர், திருச்சி ராப்பள்ளி, இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், தஞ்சாவூர், கடலூர் ஆகிய 7 மாவட்டங்களை சார்ந்த 8 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இத்துறையில் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

**நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை அலுவலர்களுக்கு ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் 10 புதிய வாகனங்கள் வழங்குதல்:**

*தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் பணிபுரிந்து வரும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர், மதுரை மண்டலத் துணை இயக்குநர் மற்றும் ஈரோடு, திருவாரூர், புதுக்கோட்டை, நீலகிரி, காஞ்சிபுரம், கடலூர் ஆகிய மாவட்டங் களைச் சார்ந்த உதவி இயக்குநர்களுக்கு அவர்களது பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ, 85 இலட்சம் மதிப்பீட்டில் 10 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அந்தந்த மாவட்டங்களின் பயன்பாட்டிற்கு வழங்கப் பட்டது.*

*இந்நிகழ்ச்சியின்போது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை திருமதி. பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் முனைவர் கே. எஸ்.பழனிச்சாமி, நிலஅளவை மற்றும் நிலவ ரித்திட்ட இயக்குநர் தீபக் ஜேக்கப், கூடுதல் இயக்குநர் (மறு நிலஅளவை) மு. வெங்கடேசன், இணை இயக்குநர் வ.சரவணன் மற்றும் இத்துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.*

### இலண்டன் பொருளியல் பள்ளியில் படித்தபோது –

# அண்ணல் அம்பேத்கர் தங்கியிருந்த இல்லம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டு – பெருமிதப் பதிவு!

இலண்டன், அக்.15-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் எக்ஸ் தள பதிவு வருமாறு :

**பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் லண்டன் பொருளியல் பள்ளியில் படித்த போது, தங்கியிருந்த இல்லத்தைப் பார்வையிட்டோம்.**

**இந்திய அரசியலமைப்பை உருவாக்க காத்திருந்த ஓர் இளைஞன் ஆகப்பெரும் ஆயுதமாக கல்வியைக் கருதி, தங்கி பயின்று கொண்டிருந்த இல்லத்தை மாணவருக்குரிய மனதோடு பார்வையிட்டதில் பெரும் மகிழ்ச்சி.**

இவ்வாறு அப்பதிவில் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், லக்கிநாயக்கன் பட்டி ஊராட்சியில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10லட்சம் மதிப்பில் பயணிகள் நிழற்குடை, ரூ.40 லட்சம் மதிப்பில் துணை சுகாதார புதிய கட்டிடம், கிழக்குத் தெருவில் பகுதி நேர ரேஷன் கடை கட்டிடம் திறப்பு விழா ஷீலா ராஜேந்திரன் தலைமையில், ஒன்றியக் கழகச் செயலாளர் அசோக்குமார், அஸ்வினி செந்தில்குமார், ராதாகிருஷ்ணன், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட கழக செயலாளர், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார், நிகழ்ச்சியில் ரஞ்சிதா சாமிதுரை, பீர்முகமது, பாண்டு ரங்கன், விஜயகுமார், நாகராஜ், ராமமூர்த்தி, சேட்டு, முனுசாமி, அண்ணாதுரை, துரை, அர்ஜுனன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்டம்

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, அக்டோபர் 18 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழி மொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செய லாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 14.10.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம்வளத்தி, கலிங்க மலையில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 17.67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டபகுதி நேர நியாய விலைக் கடையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.